DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.STC 1438/2022

Prosecution witness – PW.2

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.மாரிச்சாமி | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1, A2 absent. Petition U/s 317 Cr.P.C filed through E-filing and allowed)
12.04.2025 – 12.15 PM

சாட்சியை நிலைய பெண் காவலர்-1451 அவர்கள் அடையாளம் காட்டினார்.

<u>முதல் விசாரணை</u>

1. நான் இராணிசேதுபுரம் கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது பெரியப்பா மகள். எங்கள் ஊரில் உள்ள எங்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் நானும் எனது பெரியம்மா மகளும் தனித்தனியாக வீடு கட்டி வசித்து வந்தோம்.

2. பெருநாழியைச் சேர்ந்த ஒரு நபர் நான் வசித்து வந்த வீட்டிற்கு அருகில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தை எழுதி பட்டா வாங்கும் போது எங்கள் இடத்தையும் சேர்த்து எழுதி பட்டா வாங்கியுள்ளார். இந்த விபரம் எனக்கு சம்பவத்தன்று எங்கள் வீட்டை இடிக்க வரும் போது தெரிந்து கொண்டேன்.

3. கடந்த 08.12.2022 ம் தேதி மாலை சுமார் 05.00 மணியளவில் நான் வேலைக்கு சென்றிருந்தேன். பின்னர் 06.00 மணியளவில் வீட்டிற்கு வந்தேன். எனது வீடு இடிக்கப்பட்டு கிடந்தது. அ.சா.1 ன் வீடும் இடிந்து கிடந்தது.

4. நான் வேலை முடித்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது எனது வீட்டை இடித்த JCB வாகனம் வந்து கொண்டிருந்தது. வீட்டை

இடித்தவர்கள் முத்துமுருகன் மற்றும் வெளியூரைச் சேர்ந்த 3 நபர்கள் அங்கிருந்து சென்று கொண்டிருந்தார்கள். நான் முத்துமுருகனிடம் கேட்ட போது நீங்கள் வசித்து வந்த இடம் எனது பட்டாவில் இருந்து வருவதாக சொன்னார்.

5. பின்னர் இரவு நேரம் என்பதால் மறுநாள் காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u> இல்லை.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.